"குடி அரசு" பதிப்பக வெளியீடு எண். 15.

அகத்தியர் ஆராய்ச்சி.

சென்னை இராஜதானி கலாசாலை தமிழ் ஆசிரியர்,
உயர்திரு. கா. நமச்சிவாய முதலியார் அவர்கள்.

2000 காப்பிகள்

1931

குடி அரசுப் பிரசுராலயம், ஈரோடு.

விலை] [அணா 2.

அகத்தியர்.

"எல்லாம் கடவுள்செய்யவல்லவர். அவரில்லாதது ஒன்றுமில்லை. அதுபோலவே முனிவர்களும் கடவுள் தன்மை வாய்ந்தவர்கள். அவர்களாலும் ஆகாதசெயல் எதுவுமில்லை. அவர்கள் "அணுவை மலையாகவும் மலையை அணுவாகவும் மாற்றவல்ல ஆற்றலுள்ளவர்கள்" என்னுங் கருத்துக்கொண்ட நண்பர்களுக்கு யான் எதும் அறிவுரை வல்லே னல்லேன். அவ்வாறன்றி முனிவர்கள் மானிட வகுப்பைச் சேர்ந்தவர்களே. அவர்கள் சிறந்தஅறிவு வாய்ந் தவர்கள் என்று மட்டும் கொள்ளத்தகுந்தவர்களுக்கு யான் கூறப்புகுந்த இவ்வாராய்ச்சி பொருந்துவதாகும். மாந்தரைக் கடவுளாகவே எண்ணிவிட்டால் அவர்கள் எல்லாம் செய்ய வல்லவர்கள் தான் என்றே கருதவேண்டும். அவர்களைச் சிறந்த அறிவுடையவர்களாக எண்ணினுற்றுன் ஆராய்ச்சி என்பது பொருந்தும்.

புராணக் கதைகளெல்லாம் ஒரு காலத்து ஒருண்மை யைப் புலப்படுத்த உண்டானவை. அவற்றில் உண்மை சிறிதும் பொய்ம்மை பெரிதும் கலந்திருக்கும். அவ்வுண் மையும் வெளிப்படையாகப் புலப்படாதவாறுபெரும்பாலும் உருவகங்களாக அமைக்கப்படும். அவ்வுருவகங்கள் சில இடங்களில் தெளிவாகப் புலப்பட பலவிடங்களில் அவை அவ்வாறு புலப்படாது மறைந்து கிடக்கும். அவ்வகையில் அகத்தியனுரைப்பற்றிய உண்மைக் கூற்றுக்களையும் பொய்

ம்மை மலிந்த புராணக் கதைகளையும் ஈண்டு ஆராய்வோம். இதன் பொருட்டே இன்று "அகத்தியர்" என்பதை யான் எடுத்துக் கொண்டது

அகத்தியரைப் பற்றிய செய்திகள் முதற் கண் இருக்கு வேதத்தில் காணப்படுகின்றன. இருக்கு வேதமே வடமொழியில் மிகப்பழமையான நூலென்ப. ஆகவே அதிற்காணப்படும் அகத்தியனும் மிகப் பழமையான முனிவர் என்பது பெறப்படும். நமது நாட்டில் சமீபகாலத்தில் தோன்றிய கம்பர் முதலானவர்களுடைய பிறப்பு வளர்ப்பு முதலியவைகள் இன்றும் நன்கு தெரிந்தபாடில்லை. அப்படியிருக்க நீண்டகாலத்துக்கு முன்னரே இருந்தவராகக் கொள்ளப்படும் அகத்தியரது வரலாறுகளை ஆராயப்புகுவது பெரிதும் அசாத்தியமேயாகும். அவ்வாறிருப்பவும் அவரைப்பற்றி ஆராயப்புகுந்தது எதற்கோ எனின், தமிழராயினர் அனைவரும் முதற்கண் அறியுஞ் சரித்திரம் அகத்தியனர் சரித்திரமாகுமென்பதே.

யான் எவரும் இறங்காத துறையில் இன்று இறங்குகின்றேன். அவ்விடத்து என்ன ஏற்படுமோ அறியேன். ஆதலின், யான் கூறும் செய்திகளுள் உண்மை இருத்தல் கூடுமோ, அல்லது பொய்ம்மை இருத்தல் கூடுமோ என்பதை அறிஞர்களாகிய நீங்கள் ஆராய்ந்து கொள்ளுதல் வேண்டும். யான் சொல்லுவதில் காணப்படும் குற்ற ஏற்றங்கள் ஒருபால் இருப்பினும், யான் ஆராயப்புகும் முறை சரியானதென்று தோன்றுமாயின், அதுவே யான் இன்று செய்யும் உபந்நியாசத்துக்குத் தக்க பலனுமாம்.

நம்முடைய நாட்டில் தெரிந்தோ, தெரியாமலோ, சில கருத்துக்கள் நிலையாக அவரவர் மனதில் ஊன்றியுள்ளன. அவர்கள் அத்தகைய செய்திகளைக் கேட்கும்பொழுது, அவை உண்மையாயிருத்தல் கூடுமோ! என்று ஆராய்வதில்லை ஆராயும் பருவம் வருவதற்கு முன்னரே இத்தகைய செய்திகள் அவர்கள் மனதில் ஏறிப் பதிந்துவிட்டன வென்றால், ஆராயும் பருவம் வந்த பின்னரேனும், முன்னர்க் கேட்டறிந்த செய்திகள் உண்மையாயிருத்தல் கூடுமோவென்று ஆராய்ந்து பார்ப்பதில்லை. அன்றியும், ஒரேவிதமான கதை இரண்டு நூல்களில் வேறுபட்டுக் காணப்படின், அவற்றுள் மூந்தியது, எது பிந்தியது எது; அக்கதைகளுள் காணப்படும் வேற்றுமைகள் யாவை, என ஆராய்ந்து, சீர் தூக்கிப் பார்க்கும் அநுபவமும் நமக்கு இல்லையென்றே சொல்லலாம். உதாரணமாக, மதுரைப் புராணத்தை உணர்த்தும் திருவிளையாடல்கள் இரண்டை எடுத்து ஆராய்வோம். ஒன்று பெரும்பற்றப் புலியூர் நம்பி செய்த திருவிளையாடல். மற்றொன்று பரஞ்சோதி செய்த திருவிளையாடல். இவ்விரண்டிலும் கதையில் வேற்றுமைகள் அங்கங்கே காணப்படுகின்றன. திருவிளையாடல்களும் ஒன்றுக்கொன்று இடம் மாறுபட்டுக் காண்கின்றன. வாதவூரடிகள் புராணத்தில்வரும் செய்திகளுக்கும் இவ்விரண்டு புராணங்களில் அவரைப் பற்றிவரும் செய்திகளுக்கும் வேற்றுமைகள் மிகப்பல. இவற்றுளெல்லாம் பெரும்பற்றப் புலியூர் நம்பி செய்த திருவிளையாடற் செய்திகள் பெரும்பாலும் அறிஞர் ஒப்புக்கொள்ளக்கூடியனவாம். இந்நூலை பிரம்மஸ்ரீ மஹாமஹோபாத்தியாய சாமிநாதையரவர்கள் பலவகை ஆராய்ச்சி-

குறிப்புகளுடன் வெளியிட்டிராவிட்டால், இவ்வகைய அருஞ் செய்திகளும் நமக்குத் தெரியாமற் போயிருக்குமன்றோ? அதுபோலவே, எத்தகைய ஆராய்ச்சிகளுக்கும் சரித்திர வேறுபாடுகள் காணுமாயின், அவற்றை அடிப்படையாகக் கொண்டு உண்மைகாண முயலுதல் அறிஞர் கடனாகும். அவ்வாறின்றி அது ஒரு யுகத்தில் நடந்தது என்று யுகம் யுகமாகப் புரட்ட வல்லவர்களுக்கு எவ்விதமான உண்மைகள் விளங்கும்? இவ்வகையில் அகத்தியனைப்பற்றி என் சிற்றறிவுக்கெட்டியவரையில் ஆராயத் தொடங்குகின்றேன்.

அகத்தியனைப்பற்றி இருக்கு வேதத்தில் வரும் செய்திகள்.

முதலாவதாக அகத்தியர் என்னும் பெயர் முதற்கண் குறிக்கப்பட்டுள்ளது. அப்பெயருக்குத் தெளிவானபொருள் இதுகாறும் தெரிந்தபாடில்லை. சிலர் "மலையைஅடக்கினவர்" எனப் பொருள் கூறுகின்றனர். அப்பெயருக்கு அப்பொருள் உளதாயின் உண்மையானதாயின் அம்முனிவர் விந்திய மலையை அடக்கிய பின்னர் உண்டானதாக இருத்தல் வேண்டும். விந்திய மலையை அடக்கிய செய்தி கந்தபுராணத்தில் வரும் கதையாதலின், அதற்கு முற்பட்டதாகிய இருக்குவேதத்தில் இப்பெயர் வரக்காரணமில்லை. ஆகவே அது சற்றும் பொருந்தாத கூற்று என்ப.

இரண்டாவது, "மான" என்பவருடைய புதல்வராக, "மான்ய" என்னும் பெயர் பெற்றதாகக் காண்கின்றது. இப்படியிருக்க பிரமதேவன் உருப்பசியின் நடனத்தைக் கண்டு தன் வீரியத்தைவிட அகத்தியர் பிறந்தனரென்று

காவிரிப் புராணம் கூறும். புலத்தியற்கு ஆவிர்ப்பூவினிடத்தில் அகத்தியரும் விச்ரவசுவும் தோன்றினர் என்றும் புராணங் கூறும். கந்தர்வர் உருப்பசியினிடம் உண்டான காம மிகுதியால் கும்பத்தினிடம் வீரியத்தை விட்டும் உண்டானர் என்றும் மற்றொரு புராணம் கூறும். அது ஒரு வாறு ஒப்புமை யுடையதேயாயினும், வருண மித்திர என்பவருக்கு அகஸ்தியனரும் வசிட்டரும் பிறந்ததாகப் பின்னே அதே நூலினின்றும் கிடைப்பதனால், இவை இரண்டனுள் எது உண்மையுடையதென்றுபுலப்பட வில்லை. வருண மித்திரர்களுக்கு அகத்தியரும் வசிட்டரும் பிறந்த கதை நம்பக் கூடியதன்றும்.

மூன்றுவதாக அகத்தியனர் இந்திரனை விலக்கி மருத்துக்களுக்கு அவிர்பாகம் கொடுக்க நினைத்தனர். அதனால் இந்திரன் பெரிதும் வருந்த, அவனுக்கும்மருத்துக்களுக்கும் இவர் சமாதானம் செய்வித்தனரென்றும், சொல்லப்படுகிறது. இச் செய்தியே பிராமணங்களிலும் காணப்படுகிறது.

நான்காவது, அகத்தியனர்க்கும் லோபா முத்திரை என்பவளுக்கும் ஒரு சம்பாஷணை நடக்கின்றது. அவள் தன்னை மணந்து கொள்ள வேண்டுகிறாள். அதில் முதற்கண் அகத்தியனர் தாம் ஒரு முனிவர் என்று கூறி அவளை மேற் கொள்ள மறுத்தனரென்பதும் பின்னர் அவள் பேச்சுவன்மையால் அவளுடைய வலையில் பட்டு அவளை மணந்தனரென்பதும் தெளிவாகின்றது.

ஐந்தாவது, விஸ்பலா என்பவளுக்கு அசுவனி தேவதைகளைக் கொண்டு ஒருகாலைக் கொடுக்கும்படி உதவிசெய்

தனர். கேலா என்பவளுக்கு இவர் புரோகிதராய் ஆகமங்
திருந்ததாகச் சாயனர் கருதுகின்றார்

மற்றைய செய்திகள்.

பின்னர், புராணத்தில் வரும் செய்திகள் மிகப்பல. அவை வருமாறு:— இவரைப் பற்றிய கதைகள் கந்தபுராணம், மச்சபுராணம், திருநெல்வேலிப் புராணம், திருவிளையாடற் புராணம், காசிகண்டம், திருக்குற்றாலப் புராணம், பழனித்தலபுராணம், காவிரிப்புராணம், திருச்செங்கோட்டுப் புராணம், அவிநாசிப்புராணம், தேவிபாகவதம், என்னும் புராணங்களிலும், இராமாயணம் என்னும் இதிகாசத்திலும் காண்கின்றன. இவையேயன்றி, தொல்காப்பியப் பாயிர உரையிலும், பரிபாடலிலும், சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் வருகின்றன. இனி ஒவ்வொன்றைப்பற்றியும் சிறிது ஆராய்வோம். தாரகன் முதலிய அசுரர்கள் உலகை வருத்தினார்கள். இந்திரன் அவர்களை அடக்க அக்கினியையும் வாயுவையும் ஏவினன். அசுரர்கள் கடலில் ஒளித்தனர். அக்கினி கடல் நீரை வற்றச் செய்து அசுரர்களை வெளிக்காட்டாமல் மயங்கி இருந்தனன். இந்திரன் கோபங்கொண்டு அக்கினியைப் பூமியில் பிறக்கும்படி சபித்தான். ஆகவே அக்கினி அகஸ்தியராக ஒரு கும்பத்தில் தோன்றினார் என்பது மச்ச புராணக் கதை. இதனால் அகத்தியருக்குக் கும்பமுனி, கும்பயோனி முதலிய பெயர்கள் உண்டாயின. இக் கதை எவ்வளவு உண்மை யுடையதோ என்பதை நீங்களே ஆராயுங்கள். இது உண்மையன்றாயின், அகத்தியர் வரலாறே தலை காட்டாது ஓடும்.

2. சிவபெருமான் இமயமலையில் உமாதேவியை மணக்க இருந்த காலத்தில், தேவர் முனிவர் முதலாயினோர் ஆண்டுக் கூடினர். கூடமேவ, வடதிசைகனத்துத் தென்திசை புல்லென்றுகி, வடபால் தாழ்ந்து தென்பால் உயர்ந்தது. உயரவே, தேவர், முனிவர் முதலாயினர் அச்சுற்று நடுங்கினர். அக்காலத்தே சிவபெருமான் முனிவரைக்கூவி, நீர் சென்று தென்திசையிலுள்ள பொதியிலில் அமர்ந்தால் பூமி நிலைத்துவிடுமென்றனர். ஆகவே அகத்தியனர் தென்திசை போந்தனர். வருகிற வழியில், விந்தியமலை கர்வங்கொண்டு ஆகாயமளாவ ஓங்கி அகத்தியனர்க்கு வழிவிடா திருந்தது. அகத்தியர் அதன் உச்சியிற்கைவைத்து அழுத்தித்தான் தென்னாடு விட்டு வருந்தினையும் இவ்வாறிருக்க, எனக்கூறிச் சென்றனர். இடையில் வாதாபி, வில்வலன் என்ற அசுரர் இருவர் முனிவர்களுக்குத் துன்பஞ் செய்திருந்தனர். எவ்வாறெனில், வில்வலன்வாதாபியை ஆடாக்கி அதைக்கொன்று சமைத்து முனிவர்களுக்கு இட்டு, அதை யுண்டபிறகு வாதாபி வருக என்றழைப்பான். வாதாபியும் வயிற்றைக் கிழித்துக்கொண்டு வெளியே வருவான். அதனால் விருந்துண்ட முனிவர்கள் இறந்து படுவர். அவ்வாறே அகத்தியனர்க்கும் விருந்திட்டான். வில்வலன் பின்னர், 'வாதாபி, வருக,' என்றான். அவன் வெளிவருவதற்குள் அகத்தியனர் 'ஜீர்ணபி' என்றனர். அவன் அவ்வாறே ஜீரணமாகி இறந்து பட்டான். பின்னர் அகத்தியனர் தென்னாடு போந்து பொதிய மலையில் அமர்ந்து வசிக்கலாயினர். அதனால் பூமி சமநிலையுற்றது.

இக்கதையுள் மூன்று செய்திகள் காணப்படுகின்றன. ஒன்று பூமி தலைகீழானது, இரண்டு விந்தியம் அடக்கப் பெற்றது. இவற்றுள் முற்கதை முற்றும் நம்பத் தக்க தன்று. எவ்வாறெனில்: இக்கதையி லுள்ளவாறே கொள்ள லாகாதோ எனின், பூமி தட்டையாக இருக்கிறதென்பதும் அதன் மத்திய பாகத்தை ஒரு கோல் தாங்கிக்கொண்டிருப் பதென்பதும் பெறப்படுதலானும். உலகங்களே அண்டங் களென்றும் நமது சாஸ்திரங்களே கூறுவதனாலும், அது பொருந்தாது என்க. அதுவுமன்றி உலகத்திலுள்ள மலைகளி லெல்லாம் மிகப் பெரியதாகியஉயர்ந்துள்ள இமயமலையொன் றே பூமியை எப்பொழுதும் கவிழ்த்து விடக்கூடுமல்லவா? அதனால் இக்கூற்று வெறுங்கூற்றென்பது பெறப்படும். அன்றியும் அறிஞர்கள் எல்லாம் வடதிசை அடைந்தமை யால், அறிஞர்களின்றித் தென்திசை புல்லெனப் போயிற் றென்பதை இவ்வாறு உருவகஞ் செய்தனர் எனக்கொள் ளின், அகத்தியனார் தென் திசை வந்ததும் அகத்தியத்தைச் செய்தனர் என்பதும் பொருந்தாத கூற்றாகும். ஏனெனில் தமிழறிஞர்கள் இந்நாட்டில் இருந்தனர் என்பதும் அது கொண்டே அகத்தியனார் இலக்கணம் செய்தனரென்பதும் புலனுமன்றே!

இரண்டாவது, விந்தியமலை மேருமலையோடு மாறு பட்டு ஆகாயம் வரையில் உயர்ந்து நின்றது என்பதுகதை. அஃறிணைப் பொருளாகியமலை வளர்வதும் குறைவதும்இல்லை யாயினும் இம்மலையில் வசித்த மாந்தர்கள் அகத்தியனாரைச் செல்லவொட்டாமல் தடுத்திருக்கலாம். அவர்களே அடக்கி இவர் தென்திசை சென்றிருக்கலாம். இடவாகு பெயராகிய இதனை இவ்வாறு கற்பித்து விட்டனர் போலும்!

மூன்றாவது, அகத்தியனுடைய அபார சக்தியை விளக்குவதற்கு எழுந்த வாதாபி வில்வலன் கதையை அம்மட்டே ஒதுக்கிச் செல்வோம்.

3. அகத்தியனுர் சுப்பிரமணியரிடத்துத் தமிழ் நாட்டைப் பெற்று பாண்டியனுக்குக் கொடுத்தனர் என திருநெல்வேலிப் புராணம் கூறும். இந்திரனோடு மாறுபட்ட விருத்தாசுரன் கடலில் ஒளித்துக்கொள்ள, இந்திரன் அகத்தியனுரை வேண்டினுன். அகத்தியர் கடலைப் பானம் பண்ணி விருத்திராசுரனை இந்திரனைக் கொண்டுகொல்வித்து, மறுபடியும், கடல் நீரை விடுத்தனர் என்று திருவிளையாடற் புராணம் கூறும். இக்கதை மச்சபுராணக் கதையோடு ஒருவாறு ஒற்றுமையுடையது, ஆயினும்ஒளித்துக்கொண்ட விருத்திராசுரனைக் காட்ட, பூமியைப்போல் மூன்று பங்காக உள்ள இக்கடலைக்குடிக்க வேண்டுமா? இவ்வளவு சக்தியுள்ள அகத்திய முனிவர் விருத்திராசுரன் இருக்குமிடத்தை அறிந்து அவனை இழுத்து வெளிப்பிற் போடலாகாதா? சமுத்திரம் என்பது ஒரு ஏரியா, குளமா, கால்வயா? அறிஞர்களே! இதனை உய்த்துணருங்கள்.

4. பின்னர் நகுஷன் சர்ப்பமான கதையும் திருவிளையாடலில் வருகின்றது. அது காமுகன் அல்லற்பட்டு அழிவன் என்ற செய்தியை விளக்க வந்ததாகும். ஸப்தரிஷிகளில் இவர் ஒருவரல்லர் என்று தெரிகிறது.

இவ்வாறே பற்பல புராணக்கூற்றுக்கள் பரந்து கிடக்கின்றன. இவையெல்லாம்தலபுராணங்கள்.தலபுராணங்களை

ஒரு ஆதாரமாகக் கொள்ளுதல் பொருந்தாதெனவடமொழி வாணரேகூறுவர். அங்ஙனமாயின்வடமொழியினின்றும் மொழிபெயர்க்கப் பட்டதாகக் கூறப்படும்தமிழ்ப்புராணங்களின் தன்மை எப்படிப்பட்ட தென்பதை நீங்களே உய்த்துணரலாம். இனி இதிகாசமாகிய இராமாயணத்திற் கூறப்படும் செய்தியைக் கவனிப்போம்.

ஸ்ரீராமர் சீதையுடன் காடு சென்ற காலத்தில், அகத்தியாச்ரமத்தையடைந்தனர். அது நாலிக்குச் சமீபத்தில் உள்ளது. அங்கே சென்ற இராமர் அஸ்திரம் முதலியவற்றைப் பெற்றுக்கொண்டு பஞ்சவடியில் பிரவேசித்தனரென்பது இராமாயணத்திற்கானும் செய்தி. இதைப்பற்றிப் பின்னர் ஆராய்வோம். அத்திரி மஹரிஷியாச்சரமத்தில் அனுசூயையால் சீதை பல வரங்கள் பெற்றனளென்று கூறப்படுதல் போல, இங்கே லோபாமுத்திரையின்பெயருங் குறிக்கப்படாமை கவனிக்கற்பாலது.

அகத்தியரும் சங்க வரலாறும்.

இனி, அகத்தியனார் தென்னாடு போந்து தமிழுக்குச் செய்தநன்மைகள் எவை என்பதைப்பற்றி ஆராய்வோம். அகத்தியர் பொதிய மலையிலிருந்து சில பாண்டியரின் உதவியைப் பெற்று முதற் சங்கம் இடைச்சங்க மென்னும்இரண்டு சங்கங்களை நிறுவினர். முதற் சங்கத்திலிருந்த புலவர்கள் அகத்தியனாரும், திரிபுரமெரித்த விரிசடைக்கடவுளும் குன்றமெரித்த முருகவேளும், முறைஞ்சியூர் முடிநாகராயரும், நிதியின் கிழவனும் என இத்தொடக்கத்தாஸ்ஸ்ஸ்

மிருந்தார் என்பர். இதனுள் சிவபெருமானும் முருகக்கட வுளும் குபேரனும் ஆகிய தெய்வங்கள் அங்கத்தினராக இருந்தன ரென்பது பெறப்படும். முடிநாகராயர் என்பவர் ஒருவர் இருந்ததாகவும் தெரிகிறது. இவருடைய பாடல் புறநானூற்றில் காணப்படுகின்றது ராயர் என்னும் சொல் பிற்கால வழக்கிலுள்ளது. அது முதற் சங்கத்திலேயே பயின்று வந்ததென்பது பொருந்தாத தொன்றும். ஒரு கால் அது முடிநாகரையர் என இருத்தல் கூடுமோ என்று ஊகிக்கின்றேன். இவர் நாகவேந்தராக இருத்தல் கூடுமோ என்பதும் கருதத்தக்கது.

இனி, இரண்டாஞ் சங்கமிருந்தார் அகத்தியனாரும் தொல்காப்பியனாரும் இருந்தையூர் கருங்கோழி மோசியும் வெள்ளூர் காப்பியனும் சிறு பாண்டரங்கனும் திரையன் மாறனும் துவரைக்கோமானும் கீரந்தையும் என இத்தொடக் கத்தார் அறுபத்தொன்பதின்மர் என்ப. இவர் மூவாயிரத்து எழுநூறாண்டு சங்கமிருந்தார் எனக் கூறப்படுகின்றது. இவர்களுள் மாந்தர் பலர். துவரைக் கோமான் என்பது துவாரகாபுரிக்குத் தலைவன் எனப் பொருள்பட்ட கிருஷ்ண மூர்த்தியை உணர்த்தும் போலும். இவ்வாறு தெய்வங்களை அங்கத்தினராகக் கொள்ளுதல் எவ்வளவு ஒற்றுமையுடையதோ, அறிஞர்களே! ஆராய்மின்.

இரண்டு சங்கமும் இருந்த காலம் 8140 யாண்டுகளா கும் இவ்வளவு நெடுங் காலம் அகத்தியனார் ஒருவரே இருந்தனர் என்பது பொருந்துமோ? சங்கம் என்னும் சொல் ஒன்றே அக்காலத்துச் சங்கமிருந்ததில்லை என்பதை ஒரீ

புறுத்தும். சகரம் மொழிக்கு முதலில் வராது என்பது தொல்காப்பிய சூத்திரம். ஆகவே, அது அசம்பாவிதமென ஒதுக்கற் பாலதாம். இவ்விரண்டு சங்கங்களுக்கும் அகத்தியம் இலக்கணமாயிருந்தது. அவ்வகத்தியத்தின் வரலாறு என்ன என்று ஆராய்வோம்.

அகத்தியம் அகத்தியனால் செய்யப்பட்ட இலக்கணம். இது இயல், இசை, நாடகமென்னும் மூன்று தமிழுக்கும் செய்யப்பட்ட இலக்கணமாம். ஆனால் தொல்காப்பினர் இயற்றமிழுக்கே இலக்கணம் கூறத்தொடங்கி, தொல்காப்பியம் என்னும் நூலைச் செய்தனர் என்பர் நச்சினார்க்கினியர். தொல்காப்பியனால் சபிக்கப்பெற்று அகத்தியம் இறந்து பட்டது என்பர் சிலர். இக்கதையைப் பின்னர் ஆராய்வோம். இக்கூற்றுள் சில ஐயப்பாடுகள் நிகழ்கின்றன. நாடகம் என்பது தமிழ்ச் சொல்லன்று. ஆகவே, நாடகத்திற்கு இலக்கணம் இயற்றினர் என்பது எவ்வாறு பொருந்தும். சங்கச் செய்யுள்களெல்லாம் ஒவ்வொரு செய்தியைக் குறிக்க ஒவ்வொரு பாடலாக அமைந்துள்ளன. தொடர் நிலைச் செய்யுளாக வந்த காதைகள் ஏதுமில்லை. நாடகம் என்பதற்குக்கூத்துஎன்னலாமோவெனின், நாடகத்துக்கும் கூத்துக்கும் பெரிதும் வேற்றுமையுள்ளது. கூத்து என்பதுசிலர் சேர்ந்துபாடியாடும் நிலைமைக்குவந்துள்ளது. நாடகமென்பது தொடர் நிலையாகி வரும் கதையை எடுத்துக் காட்டி நடிப்பது. பிற்காலத்தே தான் தெருக்கூத்து முதலியவை நாடகம் என்னும் பொருளில் வந்துள்

ளது. இவ்வாறு இருப்பவும், அகத்தியனுர் நாடகத் துக்கு இலக்கணம் செய்தார் என்பது எவ்வாறு பொருந்தும்?

இனி அகத்தியம் இறந்துபட்டதற்குக் காரணம் கூறுவோம். அகத்தியனுர் தம் மாணுக்கராகிய தொல்காப்பியனுரை நோக்கி, 'நீ சென்று லோபா முத்திரையாகிய என் மனைவியை அழைத்து வருக,' என்றனர். எவ்வாறு அழைத்து வருவது எனத் தொல்காப்பியனுர் அகத்தியனுரைக் கேட்டனர். 'முன்னுகப் பின்னுக நாற்கோல் நீளம் அகலநின்று அழைத்து வருக.' என்றனர். அவ்வாறே சென்று தொல்காப்பியர் லோபா முத்திரையை அழைத்து வருவாராயினர். அழைத்து வருபவர் மதுரைக்கு அருகில் வருகிறபொழுது, வைகையில் வெள்ளம் வந்து லோபா முத்திரையை அடித்துக்கொண்டு போகவே, தொல்காப்பியனுர் அஞ்சி அங்கே இருந்த மூங்கில் ஒன்றினை முறித்து, ஆறு இழுத்துச் செல்லும் லோபா முத்திரையின் கைக்கு நீட்டினர். அவள் அதைப் பிடித்துக் கொண்டு கரையேறினுள். பின்னர் இருவரும் சென்று அகத்தியனுரைக் கண்டு தமக்கு நேர்ந்த இன்னலைக் கூறினர். அப்போது அகத்தியனுர் 'என் கட்டளையை மீறி நடந்தீராதலின், நீர் சொர்க்கம் போகாதிருப்பீர்,' என்று சபித்தனர். ஒரு குற்றமும் அறியாத எங்களை இவ்வாறு சபித்தமையின், 'நீரும் சொர்க்கம் புகாதொழிக' எனத் தொல்காப்பியனுர் அகத்தியனுரைச் சபித்தனரென்ப. சிலர் "நீர் செய்த 'அகத்தியம்' இறந்துபடுக," என்றுஞ் சபித்தனரென்ப. இவ்வாறு தொல்காப்பியத்துக்கு முதற்கண் உரைகண்டவராகிய இளம்பூரணர் கூற

வில்லை. அவருக்குக் கிடைக்காத செய்தி நச்சினார்க்கினியர்க்கு எப்படிக் கிடைத்தது என்று விளங்கவில்லை. தொல்காப்பியத்துக்கும் நச்சினார்க்கினியர் இளம்பூரணரோடுமாறுபட்டு உரை கூறும் இடங்கள் மிகப் பல. அவற்றுள் ஒன்று கூறுகின்றேன்.

'வேண்டிய கல்வி யாண்டு மூன்றிறவாது'

என்னும் சூத்திரத்துக்கு, கல்வி மேற்பிரிவு யாண்டு மூன்றே யாகுமென இளம்பூரணர் உரை கூறியிருப்பவும், நச்சினார்க்கினியர், 'வேண்டிய கல்வியாண்டு இறவாது, மூன்று இறவாது' எனப் பிரித்துக் கல்விமேற் பிரிவு ஓரியாண்டாகுமெனவும், அக்கல்வி தான் தத்துவமசி என மூன்றாகுமெனவும் கலிந்து பொருள் கொண்டார். அதனால் மேற் கண்ட கதை இளம் பூரண அடிகட்கும் நச்சினார்க்கினியர்க்கும் இடையே உண்டானதென்பது கொள்ளத்தக்கது. இளம் பூரண அடிகளுக்கு முன்னரே உண்டான கதையாயிருப் பின் அது அசம்பாவிதமென அவர் ஒதுக்கியிருத்தல் வேண்டும்.

இனி, இக்கதையை நாமே ஆராய்வோம்- லோபாமுத்திரை விதாப்ய தேசத்தின் அரசன் மகளெனப் புராணங் கூறும். இங்கே புலத்தியர் உடன் பிறந்தளாகிய லோபாமுத்திரை என்று சொல்லப்படுகிறது. கங்கையாருழைச் சென்று காவிரியாரை வாங்கிக் கொண்டு என்னூர். இதன் கருத்துதான் என்னே? 'கங்கை' என்பது ஒரு பெண்ணென்பதும் அவளுடைய மகள் காவிரி என்பதும் காணக்கிடக்கின்றது. அவை தண்ணீரோடும் ஆறுகளாவது எங்ஙனம்.

இது ஒரு புறமிருக்க, அகத்தியனுர் தொல்காப்பியனு ரை, 'நீ சென்று லோபாமுத்திரையை அழைத்து வருக' எனத் தொல்காப்பியனுர் ! 'அவரை எவ்வாறு அழைத்து வருவது?' என்று கேட்பானேன் : அதற்கு அகத்தியனுர் 'முன்னுகப் பின்னுக நாற்கோல் அளவில் நின்று அழைத்து வருக' என்று சொன்னது எதற்கு? இதனுல் இருவரிடத் தும் அகத்தியனுர்க்கு ஐயப்பாடுண்டென்று புலப்பட வில் லேயா? அங்ஙனம் ஐயப்பாடுடைய மானுக்கரை மனைவியை அழைத்து வரும்படி அனுப்புதல் ஏற்றதாமோ? நிற்க. அவ்விருவரும் வருங்காலத்து இடையே கங்கை, யமுனை, கிருஷ்ணை முதலிய பேராறுகள் இருப்பவும், அவற்றுலெல் லாம் இவர்களுக்கு ஓரிடையூருமின்றி வர, வருஷத்தில் சில நாளே ஓடத்தகுந்தவையை யாற்றில் தானு அவ்விரு வரில் ஒருத்திக்குமாத்திரம் இடையூறு நேரவேண்டும். நாற்கோலளவிற்சென்ற தொல்காப்பியனுர்க்கு இடையூறு வராமல் பின்னேசென்ற லோபாமுத்திரைக்கு மட்டும்இடை யூறு வந்ததெங்ஙனம்? ஒரு கோல் என்றுல் வெகு நீளமான அளவுள்ளது என்னலாமோ யாதோ? அவர்கள் வந்து அகத்தியனுரிடம் தமக்கு வழியிலேற்பட்ட இடர்ப்பாடுகளை யும் அதைத் தொல்காப்பியனுர்விலக்கிய விதத்தையும்சொன் னகாலத்தில், அது கேட்ட அகத்தியனுர் மிக்க மகிழ்ச்சி யடைவதை விட்டு, அவர்களைச் சபித்ததற்கு அவர் என்ன அறிவும் ஆராய்ச்சியும் யில்லாதவரா?

அகத்தியர் இலக்கண ஆராய்ச்சி.

அகத்தியனுர் இலக்கணம் செய்ததை யாராய்வோம். அகத்தியனுர் 'அகத்தியம்' என்னும் இலக்கண நூலைச் செய்

தனர் என்பது பெருவழக்கு. ஒரு நாட்டிற்கு வேறு நாட்டார் வந்து அந்நாட்டின் மொழியைப் பயிலுங்காலத்து அவர் முதற் கண் செய்வது இலக்கண நூலாம். மொழியின் இயல்புகளை நன்கு உணர்வதற்கு இலக்கண நூலே ஆதாரமானது. இக்காலத்து ஆங்கிலேயர் இந்நாட்டிற்கு வந்து தமிழ்பயிலுங் காலத்து முதற்கண் செய்தது இலக்கணமே வீரமாமுனி யென்பார் தமிழில் தொன்னூல் ஏன்னும் இலக்கண நூலைச் செய்தது இக்காரணம் பற்றியேயாம். வடநாட்டிலிருந்து வந்த அகத்தியனார் முதற்கண் இலக்கண நூலைச் செய்தனரென்பது ஆதாரமுடையதேயாயினும், அது நெடுங்காலத்திற்கு முன்னரே இறந்துபட்டதென்பது உரையாசிரியர்கள் கூற்றால் நன்கு விளங்கும். ஆயினும் அவ்வப்போது வேறு சிலர் பற்பல சூத்திரங்களைச் செய்து கோத்தனர் என்பதற்கும் ஆதாரங்கள் உள. இறந்துபட்ட நூலில் யார் எதைக் கூறினும் பொருத்தமுடையதாகக் காணுமன்றே! இங்கே சில சூத்திரங்களை யாராய்வோம்.

தரவே யெருத்த மாகங் கொச்சக
மடக்கியல் வகையோ டைந்துறுப்புடைத்தே.
கொச்சக வகையி னெண்ணெடு விரா அ
யடக்கியலின்றி யடங்கவும் பெறுமே

இவையிரண்டும் அகத்தியம் என இளம்பூரணர் கூறுகின்றார். மயிலை நாதர்உரையில்

கன்னித் தென்கரைக் கட்பழந் தீவுஞ்
சிங்களங் கொல்லங் கூவிள மென்னு
மெல்லையின் புறத்தவு மீழம் பல்லவங்
கன்னடம் வடுகு கலிங்கந் தெலிங்கம்

கொங்கணக் களுவங் குடகங் குன்ற
மென்பன குட்பா லிருபுறச் சையத்
துடனுரைபு பழகுந் தமிழ்நரி நிலங்களும்
மூடியுடை மூவரு மிடுநில வாட்சி
யரசுமேம் பட்ட கிறு நிலக்குடிகள்
பதின்மரு மூடனிருப் பிருவரும் படைத்த
பன்னிரு நிசையிற் சொன்னய முடையவும்
பலிவு னியைந்தவு மொன்றெனப் படுமே.
அடிசில் பொத்தகஞ் சேனை யமைந்த
கதவ மாலை கம்பல மீனய.

இவை அகத்திய மெனக் குறிக்கப்பட்டுள்ளன. இவற் றுள் இளம்பூரண அடிகள் காட்டிய சூத்திரங்கள் நிட்ப நுட்பம் செறிந்து தமிழியல்புக் கேற்ப நன்கு அமைந்துள் ளன. மயிலைநாதர் காட்டிய சூத்திரங்களுள் தமிழியல்புக்கு ஒவ்வாத சூத்திரங்களும் ஐயப்பாட்டிற்கு இடமான சில செய்திகளும் காணப்படுகின்றன. முதற் சூத்திரத்திற் சையமென்பதும். இரண்டாஞ் சூத்திரத்துள் பொத்தக மென்பதும் வந்துள்ளன. சகரம் அகரத்தோடும், ஐகாரத் தோடும் ஓகாரத்தோடும் மொழிக்கு முதலில் வராதென்று தொல்காப்பியனர் கூறியிருப்பவும் இங்கே சையமென வருதல் எவ்வாறு பொருந்தும்? பொத்தகம் என்பது சங்க நூல் வழக்கன்று. ஆயினும் நாலடியாரில் பொத்தகம் என்னுஞ் சொல் வந்துளதே யெனின் அது தொகை நூலாகலின் பிற்காலப்பாட்டு அதில் சேர்ந்துள்ளாதல் வேண்டும். கீழ்க்கணக்கில் ஒன்றாகி அகத்தியனர் காலத்தை நோக்கவே இது மிகப் பிற்பட்ட நூலாதல் காண்க.

அன்றியும் கன்னித் தென்கரைக்கட் பழக் நீவம், என் பதனுல் கன்னியென்பது கன்னியாகுமரியெனப் பொருள் படும். அகத்தியனுர் காலத்தில் தென்மதுரையில் முதற் சங்கம் நிறுவினதும் கபாடபுரத்தில் இரண்டாம் சங்கம் நிறுவினதும் அவையிரண்டும் கடல் கொள்ளப்பட்டதும் கூறப்படுதலால் அவர் காலத்தில் இக்குமரிக்கரை இருந்த தென்பது முற்றும் பொருந்தாது. நச்சினுர்க்கினியரும் 49 நாடுகள் கடல் கொள்ளப்பட்டனஎன்கின்றனர். ஆகவே இன்னேரன்ன சூத்திரங்கள் இடைச் செருகலாயிருத்தல் கூடும்

இனி, சமீபகாலத்தில் 'போகத்தியத்திரட்டு' என ஒரு நூல் வெளிவந்துள்ளது. அவற்றிலுள்ள சூத்திரங்கள் அத்தனையும் பொய்க்கதைகளே; அதில்குணசந்தி, விருத்தி சந்தி, தீர்க்க சந்தி ஆகிய இவற்றிற்கும் சூத்திரங்கள் உள. அன்றியும் சங்கக்கால முதலாக இன்றுவரை யேற்பட்ட தமிழ் காலவரையரைகள் கூறப்பட்டுள்ளன. இச்சூத்திரங் களை களத்தூர் வேதகிரி முதலியார் என்பவர் பேரத்திய மெனப் பேரிட்டு சில அறைகுறையான சூத்திரங்களைப் பதிப்பித்திருந்தனர். அவற்றை யானே எனது நண்பர் பவாநந்தம் பிள்ளையவர்கட்குத் தந்தேன். அவற்றோடு அவருக்குக் கிடைத்த வேறு சில சூத்திரங்களைச் சேர்த்து வெளியிட்டனர். அவர் தொல்காப்பிய முதலிய நூல்களை நன்கு ஆராய்ந்து அவற்றில் வரும் சூத்திரங்களைத் தொகுத்து வெளியிட்டிருந்தால் நலமாக விருந்திருக்கும்.

இனி அகத்தியர் தம் மாணுக்கர் பன்னிருவர் எவர் என்பதை யாராய்வோம். இவருக்கு,

1. தொல்காப்பியர்
2. செம்பூட்சேய்
3. அதங்கோட்டாசான்
4. துராலிங்கன்
5. வையாப்பியன்
6. வாய்ப்பியன்
7. பனம்பாரன்
8. கழாரம்பன்
9. அவினயன்
10. காக்கைப்பாடினியார்
11. நத்தத்தனர்
12. வாமனன்

ஆகிய பன்னிருவர் மாணாக்கரென்ப.

அகத்தியனுர்க்கு மாணாக்கர் பன்னிருவரென்பதுமுதற் கண் புறப்பொருள் வெண்பா மாலையில் வருகின்றது. பின்னர் இளம்பூரண அடிகளது தொல்காப்பிய உரையில் ("யாபன்னிருவர் உளர்போலும் மாணாக்கர் அகத்தியனுர்க்கு" எனக்) காண்கிறது. இதனையே நச்சினுர்க்கினியர்,

"யாபன்னிருவர் மாணாக்கருளர் அகத்தியனுர்க்கு" எனச் சிறிது மாற்றிக் கூறுகின்றுர். இவருள் எவரும் பன்னிருவர் பெயரையும் காட்டிற்றிலர். ஆகவே, இப்பன்னிரு பெயர்களும் எவ்வாறு வந்தன என்பது ஐயத்தின் பாற்படும். இனி, இளம்பூரணர் 'போலும்' என ஐயத்தின்பாற் படுத்துக் கூற, நச்சினுக்கினியர் அவ்வையத்தினையொழித்து உறுதிப்படக்கூறுகின்றுர். போலும் என்பது ஒப்பில்போலியாகாதோ எனின், அது ஒப்பில் போலியாயின் அதனை ஒழித்திரார் நச்சினுர்க்கினியர். அன்றியும் ஒப்பில்போலிக்கு மங்கலம் என்பதோர் ஊருண்டுபோலும், எனவேறொரு உதாரணம் காட்டப்பட்டுள்ளது. அங்கே போலும் என்பது இப்பொருள்பட, நில்லாமை காண்க. இப்பன்னிருவருள் தொல்காப்பியனுர் முதல் மாணாக்கரென்ப. அவர்

பெயர் முதலிற் சங்கத்தில் காணவில்லை. அவர் தொல்காப்பியம் செய்த பின்னரே சங்கப் புலவராயினர் போலும்.

தொல்காப்பியனர் அகத்தியனுரோடு வந்தவராயிருப்பின் அவர் முதற் சங்கத்தில் 4440 யாண்டு இருந்த பின்னர் இரண்டாஞ் சங்கத்தில் புலவராயிருக்க வேண்டுமன்றே? அகத்தியனுரே யன்றி அவர் தம் மாணாக்கரும் அத்துணை நீண்டகாலம் வாழ்ந்தனர் என்பது வியப்பினும் வியப்பே! ஆரியராயினர் நீண்ட காலம் வாழ்ந்தனரென்று வற்புறுத்திக் கூறுவது நம் நாட்டின் வழக்கம் போலும்.

இன்று அகத்தியனுரைப் பற்றிச் சங்க நூல்களிலும் காவியங்களிலும் வந்துள்ள செய்திகளே ஆராய்வோம். நமக்கு இப்பொழுது கிடைத்துள்ள தொல்காப்பியம், பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க் கணக்கு ஆகிய நூல்களில் ஓரிடத்தும் அகத்தியனுரைப்பற்றி ஒரு சிறிதும் காணப்படவில்லை. இத்தகைய அரிய முனிவரைப் பற்றி—தமிழ் மொழிக்கு முதற் கண் இலக்கணம் வகுத்த ஆசிரியரைப்பற்றி—தமிழ் நாட்டில் வந்து இரண்டு சங்கங்கள் நிறுவிய முனிவரைப் பற்றி, ஆயிரக்கணக்கான யாண்டுகள் வாழ்ந்த, வாழ்கின்ற பெரியாரைப்பற்றி, மிகப்பழமையாக வழங்கும் சங்க நூல்கள் ஏதுங் குறித்துக்கூறாதது என்னே! அகத்தியனர்க்குத் தலை மாணாக்கராக விளங்கிய தொல்காப்பியனர் யாண்டும் இவரைத் தம் ஆசிரியரெனக் குறியாதது யாது காரணம்? அவர் தம்மனைவியாராகிய லோபாமுத்திரையை அழைத்துவந்ததனுலேற்பட்டகுற்றத்தினுல் ஒருவரை யொருவர் சபித்துக்கொண்டதன் பொ

ருட்டு ஒருகால் குறிக்காது விட்டாரெனின், மற்றையோ ராவது எங்கேனும் அவர் தம் ஆசிரியரென்பதைக் குறித்தி ருக்கலாமே. அவ்வாறும்காணுமே. உரையாசிரியர்களுக்கு மட்டும் அகத்தியச் சூத்திரங்கள் கிடைத்து அவர்கள் குறித் தது எங்ஙனம் என ஒருவாறு ஐயப்பாடு நிகழும். இறையனா ரகவியலில் குறித்தபடி மூன்று சங்கங்களுக்கும் குறித்த யாண்டு 9990 எனவே, ஏறக்குறைய பதினாயிரம் வருஷங் களாகும். 13, 14-ஆம் நூற்றாண்டுகளில் எழுந்த உரையாசி ரியர்கள் காலத்தைக் கணக்கிட்டால் 11000 வருஷமாகும். இவ்வளவு நீண்ட காலத்துக்கு பிறகு உரையாசிரியர்களுக்கு மட்டும் கிடைத்த சூத்திரங்கள் சங்கத்தாருக்குக் கிடைக் காததென்ன? ஒரு கால் கடைச்சங்க காலத்துக்குப் பின்னர் எவரேனும் ஒருவர் எழுதி அதனை அகத்தியர் பேரால் வெளியிட்டனரோ வெனசிலர் ஐயப்படுகின்றனர். இவற்றுள் எல்லாம் தொல்காப்பியனார் முதலிய மாணாக்கர்கள் சொல் லாமல் விட்டதே பெருங்குறையாகக் காண்கின்றது. அன்றி யும் அகத்தியனாரைப்பற்றியும் அவர் நிறுவிய சங்கங்களைப் பற்றியும் சங்கநூலில் ஓரிடத்தும் காணப்படாமை பெரிதும் வியக்கத்தக்கது, சங்கம் என்னும் சொல் அக்காலத்தில் வழக்கில் இருந்திராது. அல்லது அதனை யுணர்த்தும் வேறு தமிழ்ச் சொல் அக்காலத்தில் வழங்கியிருத்தல் கூடுமோ வெனின், 'கூடல்' 'கழகம்' என்பன சங்கம் என்னும் சொலலுக்கேற்ற தமிழ் மொழிகளாகக் கூறலாம். ஆயினும் அவை 'சங்கம்' என்னும் பொருளில் பழந்தமிழ் நூல்களில் வரக்காணும். கூடலென்னுஞ் சொல் மதுரைக்குப் பெய ராக வந்திருக்கலாமோவென ஊகிக்க இடமுண்டு. 'கழகம்'

என்பது பொதுவாக கூட்டம் எனப் பொருள்பட்டுப் பின்னர் புலவர் கூடுமிடம், சூதாடுமிடம், முதலியவற்றையுங் குறிக்கின்றது. இவ்வளவு பெரிய சங்கத்திற்குத் தனியாக ஒரு தமிழ்ச் சொல்லும் எற்படாதிருக்குமா? ஆனல், சகரக் கிளவி கடைச் சங்க காலத்தில் சில வந்திருப்பதனல், கடைச்சங்கம் மட்டும் அபபெயரால் இயைந்திருப்பது ஒருவாறு பொருந்தும். சகரமொழிக்கு முதலில் வர்ரா தென்பதும் பற்றியே, சபை, சமணர், சமயம் முதலிய வடசொற்கனே, அவை, அமணர், அமயம் எனத்திருத்தி வழங்கிய தமிழ் மக்கள் சங்கமென்னுஞ் சொல்லே மட்டும் முதற் சங்க முதற்கொண்டு வழங்கி வருவாரோ, அப்படி வழங்குவதாயின், அதனை அங்கம் என்றன்றே வழங்கியிருத்தல் வேண்டும். இதை யாராய்ந்தால் இக்கதையைப் புதிதாகப் பிற்காலத்தே ஒருவர் தழைத்திருக்க வேண்டுமென்று தோன்றவில்லையா? இவ்வாறெல்லாம் ஆராய்ச்சி செய்தால் அகத்தியனுர் ஒருவர் அகத்தியம் செய்தன ரென்பதும், அவர் சங்கம் நிறுவினரென்பதும் எவ்வாறு பொருந்தும்? இனி பத்துப் பாட்டுள் ஒன்றன மதுரைக் காஞ்சியில் காணப்படும்.

தென்னவற் பெயரிய துன்னருந் தும்பிற்
றென்முது கடவுட் பின்னர் மேய
வரைத்தா ழருவிப் பொருப்பிற் பொருந.

என்னும் இவ்வடிகளுக்கு நச்சினுர்க்கினியர் கூறும் உரையாவது:— இராவணனைத் தமிழ் நாட்டினின்றும் பெயர்த்த அகத்திய முனிவருக்குப் பின்னர் அச்சங்கத்தை நடத்தும் பாண்டியனே!' என்பதாம். ஈண்டு தொன்முது

கடவுள் என்பது அகத்தியரைக் குறிக்கின்றது. ஆனால் அகத்தியரை இந்த அடைமொழி கொடுத்து ஆசிரியர் கூறியிருப்பாரோ என்பதை யாராயவேண்டும். இவ்வடிகளுக்கு வேறு வேறு பொருள் கூறுவாறுமுளர். அவற்றுள் ஒன்று யமனை உதைத்த சிவபெருமானுக்குப் பின்னர் அம்மரபிற் றோன்றிய பாண்டியனே என்பது. இதில் சிவபெருமான் யமனை உதைத்த கதையும் தடாதகைப் பிராட்டியை மணந்து சோமசுந்தர பாண்டியனாக மதுரையை ஆண்ட கதையும் பெறப்படும்.

பின்னர், பரிபாடலில் ஒரு செய்தி காண்கின்றது. அது அகத்திய நகூஷத்திரத்தைப் பற்றியது. அகத்திய நகூஷத்திரம்அகத்தியர் பெயரால் ஏற்பட்டது. அதுநெடுகாலையவழக்கைக் குறிப்பதாயினும், தமிழ் நூலில் அவர் பெயர் வந்த அளவு கணிக்கலாமே யல்லாது, வேறு யாதும் கொள்ள முடியாது. சில செய்திகளில் சிறந்த மாந்தர் பெயரைச் சிறந்த பொருள்களுக்கு இட்டு அழைப்பது மாந்தர் கொள்கை. அது மலை, நதி, ஊர் முதலியவற்றிற்கும் பொருந்தும். அது போல் அகத்தியனார் சிறந்த வராயிருத்தலின் அவர் பெயரை அந்த நகூஷத்திரத்துக்கு இட்டிருக்கலாம். அதனால் அவர் தமிழுக்கு ஏதும் செய்தாரென்று நிச்சயிக்க முடியாது.

தெய்வமால்வரைத் திருமூனியருள
எய்திய சாபத் திந்திர சிறுவனொடு
தலைக்கோற் றூனத்துச் சாப நீங்கிய
மலைப்பருஞ் சிறப்பின் வானவர் மகளிர்
சிறப்பிற்குன்றுச் செய்கையொடு பொருந்திய

பிறப்பிற் குன்றுப் பெருந்தோண் மடந்தை
காதவிழ் புரிகுழன் மாதவிதன்னை.—

இதில் பொதியமும் அகத்தியரும் வந்துள்ள செய்தி, முற்காலத்தில் சயந்தனும் உருப்பசியும் அகத்தியரால் இந்திர சபையில் சாபம்பெற்றனர் என்பதைத் தெரிவிக்கின்றது. ஆகவே அது இங்கே எடுத்து ஆராயத்தக்கதன்று. இன்னும் இரண்டு இடங்களில் இதே செய்தியை வலியுறுத்த ஆதாரங்கள் காட்டப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்று 'நான்முகத்துள்' எனக்குறித்திருக்கின்றது. அது இன்னதென விளங்கவில்லை.

கடவுட்கணிகை காதலஞ் சிறுவ
ருருமறை முதல்வர் அந்தணரிருவரும்.
—மணிமேகலை.

என்பதற்கு மஹாமஹோபாத்தியாய ஐயரவர்கள் 'கடவுட் கணிகையாகிய திலோத்தமை என்பவளுக்குப் பிள்ளைகளாகிய வசிஷ்டர், அகஸ்தியர்,' எனக்குறிப்புரை எழுதியிருக்கின்றனர். அங்கே 'கடவுட் கணிகை' என்பது திலோத்தமை என்பதற்கு நீலகேசியினின்றும் ஆதாரம் காட்டுகின்றனர்.

செங்கதிர்ச் செல்வன் திருக்குலம் விளக்கும்
கஞ்சவேட்கையிற் காந்தமன் வேண்ட
அமரமுனிவ னகத்தியன்ஞாறது
கரகங்கவிழ்த்த காவிரிப்பாவை—மணிமேகலை

இதில் அகத்தியனுர் கங்காசலத்தைத் தம் கரகத்தில் கொண்டு வர, அது காவிரியாறுகப் பெருகிய செய்தி சொல்

லப்படுகிறது. இக்கதை சீகாழித்தல புராணத்தில் இந்திரன், தான்வைத்தநந்தவனம் தண்ணீரில்லாமல்உலர்ந்துபோகவே விநாயகரை வேண்ட, விநாயகர் காகஉருக்கொண்டுசென்று அவரது கரகநீரைக் கவிழ்க்க அது காவேரியாறுகப் பெருகியோடிற்று என்று கூறப்படும் கதையை மூற்றும்ஒத்திருக்கின்றது. இக்கதை தமிழ் நாட்டில் விநாயகர் வழிபடுகட வுளாகத் தோன்றிய காலத்துக்குப் பிறகு ஏற்பட்டதாக இருத்தல் வேண்டும். விநாயகர் சங்க காலத்தில் வழிபடு கடவுளாக இருக்கப்பெற்றிலர். சங்க நூற்றொகைகளுக்குக் காப்புச் செய்புள் எழுதிய பாரதம் பாடிய பெருந்தேவனரும விநாயகருக்கு வணக்கங் கூறியதாகத் தெரியவில்லை.

அமர முனிவன் அகத்தியன் றனரு
துயர்நீங்கு கிளவியின் யான்றோன் றளவும்
கந்தன் காத்தல் காகந்தி யென்றே:—

எனவும் மணிமேகலையில் குறிக்கப்பட்டுள்ளது. இவையனைத்தும் புராணக்கதைகள் நம் நாட்டில் எங்கும் பரவிய பிறகு உண்டானவையாகும். ஆகவே, இவை புராணக்கதைகளென்று கூறி விடுத்தலேயன்றி, ஆராய்ச்சி எதும் வேண்டுவதில்லையாம். அப்படி வேண்டுவதாயின் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரண்டு நூல்களிலும் காணப்படும் கதைகளுக்கெல்லாம் காரணம் கூறவேண்டிவரும். "கிரிப் பிள்ளையும் அந்தண மாதும்" முதலிய சாமானிய கதைகள் சிலப்பதிகாரத்தில் காண்கின்றன. கோவலன் வீரத்தை விளக்கத்தக்க பல கதைகள் மிகப்பலவாம். மணிமேகலா தெய்வம் மணிமேகலையை மணி பல்லவத்துக்கு எடுத்துச் சென்றதும், அங்கே அவள் அமிர்த சுரபியைப்

பெற்றதும் முதலாயின, கதைகளே யன்றே? அவற்றிற் கெல்லாம் என்ன காரணம் கூறுவது? அதனால் இதனை அம்மட்டோடு விடுவோம்.

சிவபெருமான் பாணினிக்கு வடமொழி இலக்கணத்தையும் அகத்தியனுர்க்குத் தமிழ் இலக்கணத்தையும் போதித்தனர் என்ப. பழனித்தல புராணம், முருகக் கடவுள் அகத்தியனுர்க்குத் தமிழை உபதேசித்தனர் என்று கூறும்.

அகத்திய முனிவர் தேவாரத்திரட்டு எனவொரு நூல் வழங்குகின்றது. சிவாலய முனிவர் அகத்தியனுரைவேண்ட அவர் வந்து தேவாரம் முதலிய பாசுரங்களைத் திரட்டிக் கொடுத்ததாகக் கதை. அந்நூல், மிகப்பிற்பட்ட காலத்தில் தொடுக்கப் பெற்றதாதலின் அக்காலத்தும் அகத்தியனுர் போந்திருந்தனர் போலும்!

பின்னர் நக்கீரனுக்கு அகத்தியரைக் கொண்டு சிவபெருமான் இலக்கணம் போதிக்கச் செய்தனர் என்பது திருவிளையாடற் புராணம். அங்கே கூந்தலுக்கு இயற்கை மணம் உண்டா இல்லையா, என்பது ஆராய்ச்சி. அதனை யறியாத நக்கீரருக்கு அகத்தியனுர் இலக்கணம் உபதேசிக்கின்றனர். அவர் உபதேசித்த தெல்லாம், குற்றம் பத்து, பத்து அழகு முதலியனவாம். இப்பாயிரப்பகுதிகளைக்கற்பிப்பதனால் பயன்யாது? பாயிரமுந் தெரியாத நகீரர் சங்கத்தில் தலைமைப் புலமை வகித்தமை பெரிதும் வியப்பன்றே?

இனி, கல்லாடர் என்னும் வங்காளப்புலவர் அகத்தியர் என்னும் விஷயமாகக் கூறுவது:— அகத்தியர் ஆரியமதக்

கொள்கைகளைத் தமிழ் நாட்டில் பரப்புவதற்கும், ஆரியர்களைத் தமிழ் நாட்டிற் குடியேற்றுவதற்கும் செய்த முயற்சியே அவர் தென்னாடு போந்ததற்குக் காரணம். அவர் தென்னாடு போந்து, இங்கே நிலைத்திருந்ததோடும் அமையாது; இந்து சமுத்திரத்திலுள்ள சுமட்ரா, ஜாவா போர்னியோ, முதலிய தீவுகளுக்கும், கம்போடியா, சையாம், என்னும் நாடுகளுக்குஞ் சென்று சைவசமயத்தைப் பரவச்செய்து அங்கும் ஆரியர்களைக் குடியேற்றினர்—என்பர்.

இவ்வுபந்நியாசத்தை நான் எழுதுகிற பொழுது, நண்பர் சிவராஜப் பிள்ளை அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரை யொன்றைப் பார்வையிட்டேன். அவர் அகத்தியனுரைப்பற்றி பல செய்திகளைக் கூறி, முடிவாகத் தமிழ் நாட்டில் அகத்தியனு ரொருவர் இருந்தனரென்பதுபொருந்தாதகூற்றும். ஏனெனின், அகத்தியனுரைப் பற்றி வருகிற கதைகளெல்லாம் தொடர்ச்சியுறக்காணவில்லை, தனித்தனிக் கதைகளாகவே இடையிடிட்டுப் போகின்றன. அப்படி வருகிற கதைகள் ஒன்றேடொன்றுமுரண்டுகின்றன.எனக் கூறி இவற்றை யாதரிக்கச் சிற்சில காரணங்கள் கூறுகின்றார்.

எனக்குக் கிடைத்த மட்டில் அகத்தியனுரைப்பற்றிய செய்திகள் இவ்வளவே யாகும். இனி, இவற்றை யெல்லாம் தொடுத்து முடிவுரை கூறு முகத்தால் என் உபந்நியாசத்தை முடித்துக் கொள்வேன்.

அகத்தியரைப்பற்றி முடிவிடங் கூறுவதற்குச் சில நிபந்தனைகளை நாம் ஏற்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

(1) அகத்தியர் யார்? (2) அகத்தியர் ஒருவரா பலரா? (3) அகத்தியர் சாமங்கள் ஆங்காங்கே ஏற்பட்டதற்கு நியாய மென்ன? (4) அகத்தியர் தென்னாடு போந்த போது இராவணனே வென்றதாகச் சொல்லும் செய்தி உண்மையா? (5) அகத்தியர் செய்தது உண்மையா? (6) திருணதூமகத்தி முனிவரே தொல்காப்பியரா? (7) அகத்தியர் கடலைக்குடித்த கதைபின் உண்மையாது? (8) அகத்தியர் செய்ததாகக்கூறும் வைத்திய நூல்கள் முதலியன.

அகத்தியர் யார்? இருக்கு வேதத்தை யாராய்ந்தால் அக்காலத்திலே பெறப்படும். 'மான' என்பவருடைய புத்திரர் ஒருவர், வருண-மித்திரர்களுக்குப் பிறந்த அகத்தியர் ஒருவர். இப்படி அகத்தியர் என்னும் பெயரால் பற்பலர் காணப்படுகின்றனர். நிலோத்தமைக்குப் புதல்வராக அகத்தியர் ஒருவர் குறிக்கப்படுகிறார். இவ்வாறே இராமாயணத்துள், இராமர் அகத்தியாசர்மத்துக்குச் சென்றகாலையில், காலிக்கு அருகிலிருந்த அகத்தியர் ஒருவர் இருக்க, ஸ்ரீராமர் சீதையை மீட்டுக் கொண்டு வருங்காலத்து அவர் அவனுக்குச் சொன்னதாக ஒரு ஸ்லோகம் காணப்படுகின்றது. "அகத்தியனுர் தென்னாட்டைக் காடுகெடுத்து, நாடாக்கி, வாச யோக்கியமாகச் செய்தது எவ்வளவுசிரமமுடையதோ, அவ்வளவு சிரமத்தையும் நானடைந்து உன்னை மீட்டேன்," என்பது அதன் கருத்து. இதனால் காலிக் ஆசிரமத்திலிருந்த அகத்தியர் ஒருவரென்பதும் தென்னாட்டைக் காடு கெடுத்து நாடாக்கிய அகத்தியர் ஒருவரென்பதும் ஊகிக்கலாம். காலிக்கு அருகிலிருந்த அகத்தியனுரே விந்தியமலைக்கு தட்சணபாகத்திலிருந்த காட்டைக் கெடுத்து நாடாக்கினரெனக்

கொள்ளலாகாதோ யெனின், அங்ஙனம் கொள்ளுதலும் கூடும். அவ்வாறாயின், தெற்கில் பொதியில் மலையில் வந்திருந்த அகஸ்தியர் இராமாயண காலத்துக்கு வந்தாரோ அல்லது பின்னரே வந்தாரோ என ஆராய்தல் வேண்டும். முன்னரே வந்திருப்பாராயின், அவரே இராமரால் குறிக்கப்பட்ட அகத்தியராதல் வேண்டும். பின்னர் வந்திருப்பின் அவர் ஓர் அகத்தியர் வேறாக யிருத்தல் வேண்டும், இராமாயண காலம் சுமார் 3000 வருடம் என்ப. அங்ஙனமாயின், இராமருக்குப் பின்வந்தவர் அகத்தியர், யென்றால், 3000 யாண்டுகளுக்குப் பின்னே அவர் வந்திருக்க வேண்டும். உதாரணமாக, தூமகாத்தியின் தந்தைய ரெனப்படும் ஜமதாக்நி முனிவர் 23-ம் வியாகர் என்று வாயுபுராணமும் தேவிபாகவதமும் கூறும். அதனால் அகத்தியனர் ஒருவரே யல்லர், பலரிருந்தனர் எனப் புலப்படுகின்றது. அங்ஙனமாயின் அகத்தியர் பரம்பரையெனப் பலர் இருந்தனரென்பதும் ஏற்படும். இக்காலத்தும் சங்கரர் ஒருவரிருந்தனரென்பதும், அவர் பரம்பரையில் வருவோரெல்லாம் சங்கரரென பெயர் கொண்டு விளங்கி வருகின்றனரென்பதும் யாவரும் அறியத்தகுந்தது. திருவாவடுதுறை மடத்திலும் தருமபுரமடத்திலும் சுமச்சிவாயமூர்த்தி என்றும் ஞானசம்பந்தமூர்த்தி என்றும் இன்னும் பெயர்கள் வழங்குகின்றன. இது போலவே ஓராசிரிய பரம்பரையில் வருவாரெல்லாம் அவ்வாசிரியர் பெயர்கொண்டே விளங்குவதுகாண்க. அவ்வாறுகொண்டாலன்றி பல்வேறு வகைக்கப்பட அகத்தியனர்க்குப்பல் வேறு காலத்தில் எழுந்த கதைகளுக்கு ஆதாரங்கள் விளங்கலாம். அவ்வாறு வந்த அகத்தியர் பலர் ஆங்காங்கே ஆச்

ரமங்கள் வகுத்துக்கொண்டு விளங்கினர் என்பது புலனாகும். காவிக்கு அருகிலிருந்த அகத்தியா சர்மம் ஒன்றும் பாதா மிக்கு அருகிலிருந்த அகத்தியாசர்மம் ஒன்று, பொதிய மலை தலிருந்த ஆசர்மம் ஒன்று, மஹாமலைய பருவதத்தில் (மலை யாவில்) இருந்த ஆச்சரமம் ஒன்று, மத்திய ஜாவாவில் அமைக்கப்பட்டுள்ள மிகப் புராதனமான சிவாலயம் குஞ்சர கோணம் என்னும் இடத்திலுள்ள கோவிலைப் போலவே கட்டுதற்கு பொருள்களைக் கொண்டு அகத்தியனர் கூடிய தாகச் சிலாசாசனம் ஒன்று கிடைத்திருக்கின்றது. குஞ்சர கோணம் என்பதும் ஆனைகந்தி என்னும் பெயருக்கே நேர் வடமொழியான பெயர் என்றும் கவனிக்கப்படுகிறது. ஆகவே குஞ்சரகோண மென்பது ஆனைகந்தியேயென்பதும் அங்கேயே மத்திய ஜாவாவிலுள்ளது போலவே சிவாலயம் ஒன்று இருப்பதென்பதும் அங்கும்அகத்தியாச்ரமம் ஒன்று இருந்ததென்பதும் ஸ்திரப்படுகின்றது.

இவற்றிலெல்லாம் அகத்தியாச்ரமங்கள் பற்பலஇடங் களில் அமைந்திருந்தன வென்பதும், அங்கெல்லாம் அகத் தியர் பெயர் கொண்டே பற்பலர் திகழ்ந்தனரென்பதும் விளங்கும். இதனால் அகத்தியர் பலர் இருந்தனரென்பது உண்மை.

பின்னர், அகத்தியர் ஒருவர் தென்னாடு போந்து அங் கிருந்த இராவணனை இசைபினால் வென்று, அவ்விடத்தை விட்டு அவனை அகற்றினர் என்பது மற்றொரு வரலாறு. இவ்வகத்தியர் முதற்கண் வந்த அகத்தியரல்லரென்பது துணியப்படும். ஏனெனில், இராவணன் என்பதுசமஸ்கிருத

பெயராகும். அதற்கு 'அழுதவன்' 'அடி வைத்தவன்' என்பது பொருள். முதற்கண் வந்த அகத்தியராக இவர் இருப்பின் அவனுகருத் தமிழில் ஒரு பெயரிருந்திருக்க வேண்டும். இராமாயணத்தில்பெயர்களெல்லாம் சம்ஸ்கிருதப் பெயர்களாக இயன்றுள்ளமை அனைவரும் அறிந்ததே. அவற்றிலும் இராமாருக்கு விரோதிகளானவர்களுடைய பெயர்களெல்லாம் இகழ்ச்சியான பெயர்களாக வந்துள்ளன. கும்பகர்ணன், சூர்ப்பனகை, முதலியபெயர்கள் குடம் போலக் காதை யுடையவன், முறம்போல நகத்தை யுடையவள் எனப் பொருள்படும். இவ்வாறே அவர்கள் தமக்குப்பெயர்களாக ஸ்ம்ஸ்கிருதத்தில் வைத்துகொண்டிருப்பரோஎன்பது யோசிக்கத் தகுந்தது. மற்றும் இராவணன் தென்னாட்டில் இருந்தான் என்பது இக்கதையால் ஏற்படுகிறது. அதுவும் ஒப்பத்தக்கதாகக் காணேம். அதன் பின்னால் வந்த அகத்தியர் எவரோ ஒருவர் இராவணன் என்றும்பெயர் கொண்ட ஒருவனை இசையில் வென்றிருக்கலாம் போலும்.

நிற்க, முதற்கண் வந்த அகத்தியனார் அகத்தியம் என்னும் நூலைச் செய்தனர் என்பது நம்பத்தக்கதன்று. அவர் முதலிரண்டு சங்கங்களை நிறுவினரென்றும்பொருந்தாதாம். வந்த பல அகத்தியர்களுக்குள் எவரோ ஒருவர் அகத்தியத்தைச் செய்ததாக இருத்தல் வேண்டும். அதுவும் கடைச் சங்க காலத்துக்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்னே பின்னே செய்தாரென்பது ஒருவகையிற்பொருந்தும். இதற்குக் காரணம் தொல்காப்பியனார் தம் நூலுள் அகத்தியனாரைப் பற்றிச் சொல்லாமையே யாகும். கடைச்சங்ககாலத்துக்குப் பின் இந்நூல் எழுந்த தென்பதற்குப் பெரிதும் சான்றுகள்

உள. உரையாசிரியர்கள் அகத்தியச் சூத்திரங்களை எடுத்துக் காட்டுவதனாலும், மயிலைநாதர் முதலியோர் காட்டுஞ் சூத்திரங்களில், சங்க காலத்தில் பயின்றுவாராத சொற்களை காணுதலாலும் என்க. இதனோடு, பாணினியாருக்கு வடமொழியை உபதேசித்த சிவபெருமான் அகத்தியனாருக்குத் தமிழ் இலக்கணத்தை உபதேசித்தனரென்று கூறப்படும் கதை யுண்மையாயின், பாணினிகாலமே அகத்தியனார் காலமாகும். பாணினி காலம் 2700 வருஷம் என்று கூறுகின்றனர்- அதனால் இவர்காலமும் அதுவே யாதல் வேண்டும். அன்றியும் அவ்லோக முனிவரிடத்து அகத்தியனார் தமிழ் கற்றனரென்ப. இதனாலும் மிகப்பிற்பட வந்த அகத்தியர் ஒருவர் தமிழ் கற்று அகத்தியம் இயற்றினரென்பது கொள்ளக் கூடியதாம். அக்காலத்தே தமிழர்களுக்குள் ஒருவிதமான எண்ணம் உண்டாயிற்று. சமஸ்கிருதம் இந்நாட்டில் பரவினதும், அதற்கு இணையானதே தமிழும் என்று கூறப்புகுந்த கொள்கையாம். அதனால், இவ்விதமான கதையைக் கட்டினர் போலும். இக்கதை வடமொழியில் வழங்கவில்லை. தமிழ்மொழியை வடமொழிக்கு இணையானதென்று கூறுவதே பெருஞ் சிறப்பெனக் கொண்ட தமிழர், இவ்வாறே பற்பல ஒப்புமைகளைக்காட்டுவாராயினர். இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் எனக் கூறியதும் இக்கருத்துப் பற்றியே. தமிழ் பாஷையெனக்கூறியதும் இக்கருத்தினாலேயே. இதனால், தமிழர் வடமொழிக்கும் தென்மொழிக்கும் சமத்துவம் கூறத் தலைப்பட்ட முயற்சியான் இவ்வாறு இடர்ப்பாடுகளையெல்லாம் விளைத்துக்கொண்டனர். இக்காலத்தே தமிழ் அறிஞர்களும் வடமொழி

வாணர்களும், மேல்நாட்டுப் புலவர்களும் மொழியின் இயல்புகளை நன்கு ஆராய்ந்து, வடமொழி இயல்புவேறு, தமிழ் இயல்புவேறு, வடமொழியாளர் நாகரீகம்வேறு, தென்மொழியாளர் நாகரீகம்வேறு என ஆராய்ந்து முடிவு கூறுகின்றனர். இவரது முயற்சி நாளும் சிறப்புற்று விளங்குவதாக!

மற்று, திருணதூமாக்கினி முனிவர்தாமே தொல்காப்பியரா? அகத்தியனார் தென்னாடு வருகையில் ஜமதக்கினியாரு ழைச் சென்று, திருணதூமாக்கினி முனிவரைப் பெற்றுக்கொண்டு வந்தனர் எனத் தொல்காப்பியப் பாயிர உரைகூறும். பின்னர், அவர் பெயர் தொல்காப்பியனெனெ மாறியதற்கு யாதும் காரணம் கூறப்படவில்லை. ஆகவே திருணதூமாக்கினி முனிவரே தொல்காப்பியனெனப் பெயர் பெற்றனரென்பது பொருந்தாது. அன்றியும், அவரே தொல்காப்பியரெனப் பெயர் கொண்டாரெனின், அவர் 8100 ஆண்டு வாழ்ந்திருத்தல் அசம்பாவிதமாம். வெள்ளூர் காப்பியன் என மற்றொருபெயர் வருவதுபோல, இவர் தொல்காப்பியன் எனப்பெயர்பெற்ற வேறொருவரே என்பது பெறப்படும்.

ஆயினும், வடமொழியாளர் கொள்கை இந்நாட்டில் பரவிப பின்னரே, தொல்காப்பியம் எழுதப்பெற்றிருத்தல் வேண்டும். நானிலங்களுக்குக் கடவுளரை வகுக்கும்போது ஆரிய தெய்வங்கள் குறிக்கப்பட்டுள்ளன. தொல்காப்பிய ஆராய்ச்சி செய்தால், இவையனைத்தும் நன்கு விளங்கும். ஆகவே திரணபிந்து எனப்பெயர்பெற்ற திருணதூமாக்கினி

யென்பவர் அகத்தியனுரோடு வந்தவராக இருக்கலாம். அவ ரே ஜாவா முதலிய இடங்களுக்குச் சென்றிருக்கலாம். இது வும்பிற்காலத்து நிகழ்ந்த செய்தியாகும். தமிழ்நாட்டிலிருந்த தொல்காப்பியரே தொல்காப்பியம் இயற்றினர் என்க.

அகத்தியர் கடலைக் குடித்தார் என்னும் வரலாறு. அக த்தியனுர் கடலைக் கடந்து ஜாவா முதலிய தீவுகளுக்குச் சென்றதை உணர்த்த எழுந்த கதை என்பர் கங்கௌலி என்பார். அதன்பொருட்டு அவர் வீதசாகரர் எனப்பெயர் பெற்றனரென்றும் கூறுகின்றனர். கடலைத்தாண்டியதைக் கடலைக் குடித்தனர் என்பது அசாம்பாவிதம். ஆனால் அகத் திய நக்ஷத்திரம் என்று ஒன்றிருப்பதனால், அது தோற்றங் காலத்து கடல் நீராவியாக மாறுவதனால் வற்றுகிறதென்றும் அது மறையுங்காலத்து மழைபெய்து சமுத்திரம் நிறைகிற தென்றும் வானநூல் வல்லார் கூறுவர். இதனையே அகத் தியர் கடல் நீரைக் குடித்தனரென்றும், அதனையே பின்னர் பெய்தனரென்றும், உருவகப்படுத்திச் சொல்லினரென்று தோன்றுகின்றது.

ஆகவே அகத்தியனுரைப்பற்றிய செய்திகளை இம்மட் டோடு நிறுத்திக்கொள்வோம். இனி அகத்தியர்களை வேத அகத்தியரென்றும், புராண அகத்தியரென்றும் இரண்டுபிரி வினராகப் பிரிக்கலாம். அகத்தியர் என்பதற்கு அகத்திக் கீரையை மூலிகையாகக்கொண்டு உண்டு வாழ்ந்திருந்தவர் எனப் பொருள்கொள்ளலாம். இதைப்பற்றி நான் மஹா மஹோபாத்தியாய சுப்புஸ்வாமி சாஸ்திரியார் அவர்களிடம்

கேட்டபொழுது, அப்பெயருக்கு வேறு தக்கபொருள் கிடைக்குமட்டும் இதனையே கொள்ளலாம் போலும் என்றனர்.

அகத்திக் கீரை இன்றும் சிறந்த ஔஷதமாகக் கொள்ளப்படுகிறது. அன்றியும், இவ்வாறே பல முனிவர்கள் மூலிகைகளின் பெயர்களால் விளங்குவது பிரத்தியக்ஷம். வாத ராயணர் என்பது இலந்தைக் காட்டில் வசிப்பவரென்று பொருள் படுவது காண்க.

இவ்வாறு பல்வகைப்பட்ட அகத்தியர்கள் ஆங்காங்கே நிலைத்து ஆரியர்களுடைய வழக்கவொழுக்கங்களையும், சிவ பெருமானுடைய தெய்வத்தன்மையையும் விளக்கிக்கொண்டு, தென்னாட்டிற்கும், தென்னாட்டையடுத்த தீவுகளுக்கும் சென்றனர். அவருள் ஒருவர் தமிழ் கற்று அகத்தியம் செய்தனர். அது கொண்டே அவரைச் சிவபெருமானுக்கே ஒப்பானவரென்றும், சிவபெருமானிடத்துத் தமிழ்க்கல்வி கற்றனரென்றும் தமிழர் கூறத்தொடங்கினர். அப்படித் தொடங்கிய பிறகு பல்வேறு கதைகள் அவரைப்பற்றிப் பரவுவனவாயின. நண்பர் சிவராஜப் பிள்ளையவர்கள், அகத்தியர் கதைகள் ஒற்றுமைப்படக் காணவில்லை; என்றும் அதனால் அகத்தியர் ஒருவர் இருந்தனரோ என்றும் ஐயங்கொள்ளுவதற்கு எழுந்த காரணம், அகத்தியனார் ஒருவரே என அவர் கொண்டகருத்தினைத் தோன்றுகிறது. மற்றபடி அவர் கூறும் ஆராய்ச்சிகளும் மேல் காட்டார் கூறும் முறைகளை எடுத்துக் காட்டும் முறையும் ஒப்புடையவையாகவே காண்கின்றன.

அவர் கூறுவதுபோல், காலந்து அகத்தியனுக்குமேல் இருந்தனரென்பதாகவே கொள்ள வேண்டுமென்பதாம்.

அறிவாலயம்

இனி அகத்தியர் வைத்தியம் எனத் தமிழ் நாட்டில் வழங்குகின்றது. அதைக்குறிக்கப் பலவகை நூல்கள் தோன்றியுள்ளன. இவையன்றி, வாதம், சோதிடம் முதலியவற்றிற்கும் நூல்கள் குறிக்கப்பெற்றன. அவையெல்லாம் பார்க்கும்பொழுதே அகத்தியர் செய்தனவல்லவென்று புலப்படும். அந்த அகத்தியர்களுக்குள்ள எவரோ ஒருவர் வைத்திய முறையை வைத்திருக்கலாம். அதைப் பயிற்சிகளுக்குக் கொண்டுவந்த சிலர் புதியதாக நூல்கள் செய்து அவர்பெயரால் புகுத்தியிருக்கலாம். சமீப காலத்திலிருந்த அகத்தியக் குடும்பன் என்னும் ஒரு பள்ளன் தனக்குத் தெரிந்த வைத்திய முறைகளைப் பாடல்களாகச்செய்து 'அகத்தியன் சென்னேன் காணே' என்று முடித்திருக்கின்றனும். இவ்வாறே பெரும் புலவர்கள் பெயரை யழிக்க சிலகாலமாகச் சிற்சிலர் தோன்றியிருக்கின்றனர். 17-ம் நூற்றாண்டின் இடையிலிருந்த தேசிங்கு ராஜனைப் பற்றி, புகழேந்திப் புலவர் பாடினரென்பது எவ்வளவு பொருத்தமுடையதென்பது கூறவேண்டியதில்லை. வெல்லியம்பலத் தம்பிரான் பாடிய பாடல்கள் இராமாயணம், பெரிய புராணம், தேவாரம் முதலிய நூல்களில் எழுதியிருப்பதனால் எவ்வளவு இடர்ப்பாடுகள் உண்டாகின்றன.

இனி இருக்கு வேதத்தில் வந்த செய்திகளை யான் கேட்டபொழுதே தெளிவுறத் தெளிவித்த மஹாமஹோபாத்யாயக்குப்புஸ்வாமி சாஸ்திரியாரவர்களுக்கு என் மனமார்ந்த வந்தனம் செலுத்துகின்றேன்.

முற்றிற்று.

உண்மை
விளக்கம்
பிரஸ்,
ஈரோடு.

உங்களுக்குச் சுயமரியாதை வேண்டுமா? ஆனால்

சுயமரியாதை இயக்கத்தில் சேருங்கள். வருஷ சந்தா அணா 0—2—0

சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளை விளக்கவும் பிரசாரம் செய்ய அனுகூலமாகவும் இருக்கத்தக்க புஸ்தகங்கள். புஸ்தகக்கடை வியாபார புஸ்தகங்களல்ல. பிரசாரத்திற்கென்றே பிரசுரித்து மிகுந்த குறைந்த விலையில் விற்கப்படும் புஸ்தகங்கள்.

1.	கைவல்யம் அல்லது கலிக்கியானம் (கைவல்ய சுவாமியார் கட்டுரைத் தொகுதி)	0—8—0
2.	மனுநீதி மர்மம்	0—2—0
3.	இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு	0—2—0
4.	சுயமரியாதைத் தாலாட்டு	0—2—0
5.	சோதிடப் புரட்டு	0—2—0
6.	ஈ. வெ. இராமசாமியின் சிரிருத்த மகாநாட்டுச் சொற் பொழிவு (2ம் பதிப்பு)	0—2—0
7.	சுயமரியாதைப் பாடல்	0—2—0
8.	தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்	0—3—0
9.	பங்கஜம் அல்லது பார்ப்பனக் கொடுமை	0—4—0
10.	ஞானசூரியன்	0—4—0
11.	இராமாயண ஆராய்ச்சி பாலகாண்டம்	0—4—0
12.	ஷை 2ம்பாகம் அயோத்தியாகாண்டம் (200பக்கம்)	0—8—0
13.	மேலோ கூறும் மெய்யா பொய்யா (2-ம் பதிப்பு)	0—3—0
14	கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?	0—2—0
15.	சித்தம்பர ரகசியம்	0—8—0
16.	சுகந்திரப்போர் அல்லது உப்பளமூற்றுகை	0—4—0
17.	அகத்தியர் ஆராய்ச்சி	0—2—0

ஒரு செட்டுக்கு ஆர்டர் செய்கின்றவர்களுக்கு வி. பி. தபால் செலவு கிடையாது.

விலாசம்:— "குடி அரசு" ஈரோடு